

யாழ் - உடுவிலம்பதியை பிறப்பிடமாகவும்
மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி **கந்தையா அன்னபூபதி**

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

## 31 ஆம் நாள் நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.04.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ் – உடுவிலம்பதியை பிறப்பிடமாகவும்
மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி

# கந்தையா அன்னபூபதி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## 31 ஆம் நாள் நினைவு மலர்

05.04.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எம்மை
பேணிப்பாதுகாத்து எம்மை
நல்வழி நடத்தி இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத்தெய்வத்தின்
பொன்னடிகளில்
இந்த நினைவு மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

யாமா சந்தி,
மானிப்பாய்

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
30.08.1932

உதிர்வு
06.03.2017

அமரர் திருமதி

# கந்தையா அன்னபூபதி

## திதி வெண்பா

ஆண்டு துர்முகியின் மாசித் திங்கள்
மாண்ட அன்னபூபதி என்னும் நல்லாள் ஈண்ட
பூண்ட பூர்வபக்க நவமித்திதி தனிலே
நீண்ட துயர் கொண்ட நாள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவோம்

## தேவாரம்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான்
மகளோடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டா மல் ஐயா
றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து
உன் விரை ஆர் சுழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியேம் ஈசனே உன்னைத்
தொண்டனே இசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையாள் ஆடு மானந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை
கோட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னர்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தையா அன்னபூபதி அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து மா சமுத்திரத்தின் இரத்தின தூபமாய் விளங்கும் சிவபூமித் திருநாடே ஈழமணித்திருநாடு ஆகும். இத் திருநாட்டின் நீர்வளமும் நிலவளமும் கொண்ட திருவூர் புலவர்கள் பாட்டிசைத்த பெருமை கொண்ட தெய்வ ஊரிலே கல்வியாளர்கள், கலைஞர்கள் சூழ்ந்த பதியாய் விளங்கும் உடுவிலம் பதி எனும் இவ்வூரிலே குடிகொண்ட அமரர் விநாயகமூர்த்தி பறுவதம் தம்பதியினருக்கு மழலைச் செல்வங்களாய் குலசேகரம்பிள்ளை, இராசதுரை, தம்பிராசா, இரத்தினபூபதி மற்றும் முத்தம்மா ஆகியோருடன் ஐந்தாவது பிள்ளையாய் 1932.08.30 இல் அன்னபூபதி பூவுலகில் அவதரித்தார். இவர் கல்வியிலும் விளையாட்டிலும் ஆர்வமுள்ளவராக விளங்கினார். இவரின் இளமைக்கால கல்வியை சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்றுத் தேர்ந்தார். இவரது இளமைப் பருவ வயது முடிவடைய பெற்றோர்கள் இவருக்கு திருமணம் செய்துவைக்க விரும்பினர்.

பார்போற்றும் சுதுமலை வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியினருக்கு காத்திகேசு, தையல்நாயகி, நாகம்மா, சின்னப்பிள்ளை, அன்னம்மா, பொன்னம்மா, நல்லம்மா ஆகியோருடன் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் அருளால் பிறந்தவர் கந்தையா. இவர் சிறுவயதில் சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றுத் தனது தந்தையாருடைய தொழிலான விவசாயத்தையும் வெற்றிலை வியாபாரத்தையும் செய்து வந்தார். இவரை அன்னபூபதிக்கு திருமணம் செய்து வைத்தனர் இவரது பெற்றோர்கள். இல்லறம் என்னும் தருமநெறியில் இவர்கள் இல்லற வாழ்வில் மனை, அறம், மங்களம் பொங்கிட மழலை செல்வங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் மானிப்பாய் மருதடி விநாயகர் அருளை வேண்டி கணேசராசா என்னும் ஆண்மகனையும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அருளை வேண்டி அருணகிரிநாயகி என்னும் பெண்குழந்தையையும் விநாயகர் அருள் வேண்டி வரதராசாவையும் முருகன் அருளால் அருச்சுணராசாவையும் பெற்று சீராட்டி தாலாட்டி வளர்த்து பள்ளிப்பருவம் அடைந்ததும் ஆரம்பக்கல்வியை சுதுமலை தமிழ்கலவன் பாடசாலையிலே கற்பித்து மேற்படிப்பிற்காக மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் கல்வி பயில வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பிள்ளைகளுடன் சிறப்புடன் வாழும் காலத்தில் இவர்களது தந்தையார் 1982.11.20ம் திகதி இறைபதம் அடைந்த பின்னரும் மனம் சோராது மக்களை சிறப்பாக வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் மூத்தமகன் கணேசராசா தந்தையின் தொழிலான வெற்றிலை வியாபாரத்தை சிறப்பாக செய்துவரும் காலத்தில் சுதுமலை தெற்கில் வசித்து வந்த சண்முகராசா இராசமணி அவர்களின் மகளான விஜியராணியை கணேசராசாவுக்கு திருமணம் செய்து வைத்தனர். இல்லற வாழ்க்கையின் பயனாக பிரியங்கா, பிரவீனா, டினுஜா, யனுஜா, விபூசன் ஆகிய பேரப்பிள்ளைகளை கண்டு மகிழ்ந்தும் பேரப்பிள்ளைகளான பிரியங்காவை Londan இல் வசிக்கும் சஞ்ஜீவனுக்கு திருமணம் செய்து சாருயாவை பூட்டப்பிள்ளையாக கண்டு மகிழ்ந்தார். பிரவீனாவிற்கு பிரான்ஸில் வசிக்கும் வசீகரனை திருமணம் செய்து மிறோசனை பூட்டப்பிள்ளையாக கண்டு மகிழ்ந்தார்.

அன்பு மகளான அருணகிரிநாயகிக்கு கொக்குவிலை சேர்ந்த அப்புத்துரை தங்கரத்தினம் அவர்களின் மகனான சந்திரசேகரனை மணமுடித்து வைத்து இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக காயத்திரி (D.D.O) என்னும் பேர்த்திக்கு காரைநகரை சேர்ந்த நிமலதாசன் (துபாலதிபர்) அவர்களுக்கு திருமணம் செய்துவைத்து பூரிப்படைந்தார். இரண்டாவது பேர்த்தியான கஜீவாவிற்கு (சமுர்த்திவங்கி) சுதுமலை தெற்கை சேர்ந்த நிறோஜனை (தொழில்நுட்ப உத்தியோகத்தர் WIN) திருமணம் செய்துவைத்ததைக் கண்டு மகிழ்ந்தார்.

செல்லமாக வரதன் என்று அழைக்கப்படும் மானிப்பாய் ப.நோ.கூ.ச. கிளைமுகாமையாளராக கடமையாற்றிவரும் வரதராசாவை உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஐயாத்துரை உலகேஸ்வரி தம்பதியினரின் மகளான சாந்தகுமாரிக்கு திருமணம் செய்துவைத்து அதன் பயனாக தர்சன் (Sri Lanka Insurance), யர்சிகா (TCT), அபிராமி (Kids Park), தினூசன் (Swiss) ஆகிய பேரப்பிள்ளைகளை கொஞ்சிக்குலாவி மகிழ்ந்தார். பேர்த்தியான யர்சிகாவிற்கு மிறோசனை (Swiss) திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதைக் கண்டு அகம் மகிழ்வுற்றார்.

கடைசி மகனான அருச்சுணராசா (France) திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கிணங்க பிரான்ஸ் நாட்டில் வேலை செய்துவரும் வேளையில் உடுவில் தெற்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை சரஸ்வதி தம்பதியினரின் மகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணகுமாரியை பிரான்ஸில் திருமணம் செய்து அதன் பயனாக அர்த்தனா, அபிராம் அபிமன்யூ என்ற பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்து, அது மட்டுமன்றி தானும் பிரான்ஸ் நாட்டுக்கு சென்று பேரப்பிள்ளைகளுடன் சிறிதுகாலம் வாழ்ந்து மீண்டும் தனது சொந்த நாட்டிற்கு திரும்பி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் வாழ்ந்துவந்தார். இவரை அயலவர்கள் பூபதி மாமி என்றுதான் அன்பாக அழைப்பர், அழைக்கும் வேளையில் அவர்களுக்கு உற்ற துணையாக நின்று உதவி புரிவதற்கும் பின்னிற்காது அயலவர்களையும் தம்பிள்ளை போன்று நேசிக்கும் நற்குணம் வாய்ந்தவர். வந்தோரை வரவேற்று அவர்களின் குறைநிறைகளை தீர்த்துவைத்து மனம் மகிழ்ந்தார்.

தினமும் ஆனந்தன் வைரவரின் நினைவுகளுடன் வைரவரை வழிபாடாற்றியும் மருதடி விநாயகர், சுதுமலை புவனேஸ்வரி அம்மன், முருகன், சிவன், ஆலயங்களிலும் அவருடைய கணவரின் குல தெய்வமாகிய வீரபத்திரர் ஆலயத்தின் பொங்கல் வழிபாடுகளை தவறாது செய்து வந்தார். இப்படி பல்வேறு பணிகளை செய்துவந்த அன்னையை 2017 ஆம் ஆண்டு மாசி மாதம் திங்கட்கிழமை இரவு 12.04ல் இறைவன் தன்னுடன் இணைத்துக் கொண்டார். உலகில் பிறக்கும் அனைவரும் இறப்பது திண்ணம் என்பதற்கிணங்க இறைபதமடைந்த அன்னையின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

"வையத்தில் பிறந்த உயிர் இறந்தே யாகும்
வையத்தீர் சிறந்த தொரு நியமங்காணீர்
கையெடுத்தே அரண் தானைப் பணியீர்
கைகொடுப்பான் அவன் அறிந்து சாந்தி கொள்வீர்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

**வைத்திலிங்கம் கந்தையா**

பிறப்பு : 1917.01.24

இறப்பு : 1982.01.20



அமரர்

**கந்தையா அன்னபூபதி**

பிறப்பு : 1932.08.30

இறப்பு : 2017.03.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் புலம்பல்

நீங்கள் எங்கள் கண்கள் அம்மா!
அதில் என்றும் உங்கள் முகம் தெரிகிறதே அம்மா!
கடைக்குட்டி நான் என்று அதிக
அன்பு பாசம் காட்டி வளர்த்த அம்மா!
உங்கள் உயிர்த் துடிப்பு நின்ற அந்த
நொடி என் நெஞ்சம் அடைத்தது
இவ்வுலகை நினைத்து உள்ளம் அழுகிறது
எம்மை விட்டுச் சென்ற அம்மா! என்றும்
எங்கள் நெஞ்சுக்குள் நிலையாய் இருப்பாய்
எம்முடனேயே என்றும் வாழ்வாய் அம்மா!
எங்கள் இதயக் கோவிலில் தெய்வமாக

மகன் தேவன்

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் ஆசை அப்பம்மா!
எங்கே சென்றீர்கள் எங்களை விட்டு
உங்கள் பாசமான பேச்சை
நாங்கள் இனி தொலைபேசியில்
எப்போதும் கேட்கமுடியாதே அப்பம்மா! அதை
நினைத்து தவிக்கின்றோம் நாங்கள்
நீங்கள் இறைவனடி சேர்ந்தாலும்
என்றும் உங்கள் நினைவில் வாழ்வோம் அப்பம்மா!

பேரப்பிள்ளைகள்
அர்த்தனா, அபிராம், அபிமன்யு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் புலம்பல்

பாசமுள்ள மாமியே!
பாரை விட்டு எங்கே சென்றீர்கள்
பரிசிலிருந்து இன்னும் ஒருமுறை உங்களை வந்து
பார்ப்போம் என்று நினைத்திருந்தோம் எல்லாம்
பகல்க்கனவாய்ப் போய்விட்டது
இவ்வுலகை விட்டு விண்ணுலகம் சென்று விட்டாலும்
எப்பொழுதும் எம்மனதில்
நீங்கள் இருப்பீர்கள் என்றும்
எங்களுடனேயே வாழ்வீர்கள்

மருமகள்- ஜானகி

# பேர்ப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

புன்னகை சிரிப்புடனே பூமி வலம் வந்தவளே
பூந்தோட்டம் போலிருந்த எம் வாழ்க்கையிலே......
புயலாக வந்த உம் பிரிவுச்சேதி
கனவாகிப் போகாதோ.....?
உற்றகதை பட்டகதை உங்களிடம்
கூறியே ஆறுதல் பெற்றிருந்தோம்
பழைய கதைகளும் விரும்பிக் கேட்டிருந்தோம்
நேற்றுவரை நீங்கள் எமை
ஆதரித்த அன்புத் தெய்வமெல்லோ.......
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் என்று
நீங்கள் எங்களை அன்புசெய்த காலங்களை
எண்ணி வாழ்திடுவோம் எங்கள் வாழ்வுதனை
அமைதி பெற்றுத்தூங்கிடுவீர் அன்னையே

பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பார்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆனந்தன் வைரவர் திருவூஞ்சல் காப்பு



பூந்தமிழும் பூப்பொழிவும் பொலியும் சைவம்
புகழோங்கும் எழிலிசையும் சீலம் ஓங்கும்
பரந்தமிகு யாழ்ப்பாணத்து மானியம்பதி
தனிலே உறைகின்ற
ஏதலவன் திரு ஆனந்தன் வைரவரும்
எழிலான தமிழ் அஞ்சல் னவகி ஆட
காந்திமிகு ஞானவைரவனாம்
கணபதியின் செஞ்சரணம் காப்பதாமே

## நூல்

சீரிலந்து பவளக்கால் மறைகளாகச்
சிறந்த உபநிடத நரவிட்டமாகப்
பேரிலந்து கலைஞானம் வடங்களாகப்
பிரணவ ரீங்காரம் பொற் பலகையாகத்
தாரிவங்கு தமிழூஞ்சல் தனிலே வைகத்
தளிர் சூலப் படையேந்தி அருளும் பூப்ப
ஊரிலங்கு மானியம்பதி தனில்
உயர் ஆனந்தன் வைரவரே ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோனமிகு பக்தியேனும் தூண் நிறுத்தி
மேவு புலன் ஐந்தையுமோர் விட்டமாக்கி
ஞானமிகு நாற்கரண வடங்குள் மாட்டி
ஞானமதில் திருவருளாம் பீடம் தேக்கி
வானவரும் போற்றுபர முக்தியூஞ்சல்
வரமெனவே ஆடருள் செய் வரகநாதா!
தேனவரும் மானியம்பதி
தவ ஆனந்தன் வைரவரே ஆடீர் ஊஞ்சல்

கானற் சடையின் கதிர் தவிர்க்குஞ்சி ஆடக்
கரத்தில் மிளிர் திரிசூலக் கதிர்கள் ஆடப்
புனற் சடையில் பதித்த மணிக்கிரீட மாடப்
புரிநூலும் மணி மார்பில் இசைந்தே ஆட
அனப் பொறியின் நிறத்தவிழி அருளும் ஆட
அங்கு சபா சப்படையும் துடியும் ஆட
தனற்றழகூர் மானியம்பதி
தவழ் ஆனந்தன் வைரவரே ஆடீர் ஊஞ்சல்

செவ்வண்ணத் திருமேனி திகழ்ந்தே யாடச்
சென் கணருள் சொரிந்தாடச் செவிகளாடக்
கொள்வைச் செவியிதழில் முறுவலாடக்
கோவைத் தலை மாலையதும் குழைத்தேயாடப்
பவ்வியஞ் சேர் வாகனச்சு வான மாடப்
பரனாடப் பறையாடப் பக்தராடக்
திவ்யவூர் மானியம்பதி
திகழ் ஆனந்த வைரவரே ஆடீர் ஊஞ்சல்

பரமசிவன் தனைமதியாப் பிரமன் நாணப்
படைக்கலவாள் ஏந்தியவன் அகந்தை நீக்கச்
சிரமதனில் ஒன்று கொய்து அகந்தை போக்கிச்
சேவடியின் மலரருளை வானோர்க்கு ஈய்ந்தாய்!
கரமலரில் தண்டமொரு சூலமேந்தும்
குருதி படித் திருமேனி வடிவுத் தேவா!
புரமதுவாம் மானியம்பதி
ஆனந்த வைரவரே ஆடீர் ஊஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்த வடை மாலையணிக் கபாலமாட

அழகொழுகு திரிசூலப் படையும் மாட

இணைந்தகர டமருகமும் அசைந்தே ஆட

இன்புறவே அருள் அடயவரதமாட

பணிந்த சுவா னமுமாடப் பூதமாடப்

பக்தருளம் களித்து விழி நீரு மாடப்

பிணைந்த மானியம்பதி

பெரும் ஆனந்த வைரவரே ஆடீர் ஊஞ்சல்

செவ்வுதயத் திங்கள் முகச் செவ்வாய் பூக்கச்

செம்முறுவல் அன்புதன்னைச் சொரிந்து கொரும்

செல்வரலாம் வியாழன் தனை அரை ஞானாக்கி

வெள்ளியணி தரித்திரு நிர்வாண மூர்த்தி

கல்வுசுவா னந்தன்னில் ஆசனிக்கும்

கதிரொளி ஞாயிறு கோடித் தேசு ரூபா!

பல்லியன சேர் மானியம்பதி

பர ஆனந்த வைரவரே ஆடீர் ஊஞ்சல்

மாங்கல்ய பாக்கியமும் மங்கையர்க்கே

மன்னிடவே அருள்பவனே ஆடீர் ஊஞ்சல்

பூங்கமழும் ஸந்தானம் பக்தருக்கே

பொலிந்திடவே தருபவனே ஆடீர் ஊஞ்சல்

தீங்கொடிய பிணி தீர்த்தே தேகாரோக்கியம்

தொண்டருக்கு இறைஞ்சிடுவோய் ஆடீர் ஊஞ்சல்

தேங்கு புகழ் மானியம்பதி

திகழ் ஆனந்த வைரவரே ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞானம் நல்கிடுவோய் ஆடீர் ஊஞ்சல்
கல்வியருள் சுரப்பவனே ஆடீர் ஊஞ்சல்
அலையாத மனம் அருள்வோய் ஆடீர் ஊஞ்சல்
ஆனந்தம் தருபவனே ஆடீர் ஊஞ்சல்
தலைமாலை சுமப்பவனே ஆடீர் ஊஞ்சல்
தளிர்ச் சூலக் கரத்தோனே ஆடீர் ஊஞ்சல்
நிலமேவும் மானியம்பதி
நிறை ஆனந்த வைரவரே ஆடீர் ஊஞ்சல்

மங்கள வாழ் வருள்பவனே ஆடீர் ஊஞ்சல்
மஞ்சள் குங்குமம் தருவோய் ஆடீர் ஊஞ்சல்
பொங்கு நிதியருள்பவனே ஆடீர் ஊஞ்சல்
பேரின்பம் சுமப்பவனே ஆடீர் ஊஞ்சல்
பொங்கரவம் பூண்பவனே ஆடீர் ஊஞ்சல்
பூரணச் செம்மேனியனே ஆடீர் ஊஞ்சல்
மங்களவூர் மானியம்பதி
மகிழ் ஆனந்த வைரவவே ஆடீர் ஊஞ்சல்

**வாழி**

வேதியரும் வானவரும் கோவும் வாழி!
விளங்கிடு தண்புனல் மாரி விரிந்தே வாழி!
நீதிபுரிவேந்தணவன் செங்கோல் வாழி!
நீணிலத்தில் சைவமதம் தமிழும் வாழி!
மாதரவர் கற்புநெறி ஞானம் வாழி!
மன்னிரு செந்தமிமீழ வளமும் வாழி!
சீதவள மானியம்பதியும் வாழி!
செழும் ஆனந்த வைரவரும் வாழி! வாழி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்.
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியர் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வர் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனர்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவுக்கு அஞ்சலி

ஈஞ்சடி ஞானவைரவர் ஆலய ஆரம்பகாலத் தர்மகர்த்தாசபை உறுப்பினரும் நாவலர் பாலர்பாடசாலையின் நலன் விரும்பியுமான திரு.கந்தையா வரதராசா மற்றும் கந்தையா கணேசராசா ஆகியோரின் அன்புத்தாயார் அமரர் கந்தையாஅன்னபூபதி அவர்கள் மீளாத்துயில் அடைந்தமையையிட்டு வெளியிடும் அஞ்சலி



அமரர்

**கந்தையா அன்னபூபதி**

மண் மகிழ — மனம் நெகிழ

30.08.1932 — 06.03.2017

அவனியிலே ஆயிரம் பிறை கண்டீர்
அன்புடன் எல்லோரையும் காத்தீர்
வேரூன்றி பல்திசையில் கிளையெறிந்து
விழுதோடி நிழலோடி இதம்தந்து விசாலித்த தாயே!
வையகத்தில் தங்கள் சிறிசுகள்
காலோடி நிமிர்ந்த வேளையில்
உங்கள் இலையுதிர் காலம்
நிறைவு பெற்ற தோ!
எனினும் கலங்கடல் தவிர்ப்போம்
சான்றோரை ஈன்றோர் மாண்டதுண்டோ?
நித்தில உடலம் மீண்டதில்
புதிய பிறப்பும் கண்டோம்....

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்*

ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்
நாவலர் பாலர் பாடசாலை
ஸ்ரீசுபா பேக்கரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறிக் கழக ஆசிரியை
செல்வி அபிராமி வரதராஜா அவர்களின் பாசமிகு அப்பம்மா

அமரர்

## திருமதி கந்தையா அன்னபூபதி



மண்ணில் 30.08.1932

விண்ணில் 06.03.2017

இன்று மலர்ந்த மலர் போல சிரித்த முகம் கொண்டீர்
அன்பின் உருவம் கொண்டு அனைவரையும் அரவணைப்பீர்
விழியில் நீரும் பெருகுதம்மா விரைந்த செய்தியிது கேட்டு
வாடி வதங்கி நிற்கின்றோம் உந்தன் பிரிவை எண்ணி
உந்தன் ஆத்மா சாந்திக்காய் உள்ளம் உருக வேண்டுகின்றோம்
உந்தன் அமைதிக்காய் அந்த ஆண்டவன் தரட்டும் ஆறுதலை

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

09.03.2017

கற்பக விநாயகர் அறநெறிக் கழகத்தினர்,
உரும்பிராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
30
08
1932

மறைவு
06
03
2017

"கந்தையா வரதராசா அவர்களின் அன்புத்தாயார்"

## அமரர்
## கந்தையா அன்னபூபதி

அன்புடன் ஆதரவாய் இருந்தீர்
பார் போற்றும் மக்கட் பேற்றுடன்
மனை வாழ்வும் சிறக்கச் செய்தீர்
ஊர் போற்றும் உத்தமக் குணங்கொண்டு
மற்றவர் துயர் போக்கும் மாண்பினில் சிறந்தீர்
இன்று பார் விட்டு பறந்தோழ
பதித்துவிட்டீர் உம் நினைவை எம்மிடையே
உம்மை சான்றவரின் துயரிலும்
இணைகின்றோம் நாம் இங்கு!

எமது நீண்டகால நெருங்கிய அன்பர் க. வரதராசா அவர்களின்
தாயாரின் மறைவை கேள்வியுற்ற நாம் ஆழ்ந்த துயரம் கொள்கின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார்,
உறவினர், துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

மானிப்பாய் மருதடி விநாயகர்
ஆலய நண்பர்கள்

மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

அமரர்

## கந்தையா அன்னபூபதி



மண்ணுலகில்
30 . 08 . 1932

விண்ணுலகில்
06 . 03 . 2017

நேற்று வரை
எம்மோடு இருந்தாய்
எங்களில் ஒருத்தியாய்
அன்போடு வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக்
காத்திருப்பாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணோடு நீ போனாய்
ஆற்றொண்ணாத் துயரமது
ஊற்றாகி ஓடுதையா!
உன் ஆத்மா சாந்தியுற
உள்ளமதால் வேண்டுகிறோம்.

பிரிவால் துயரும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மௌனங்கள் சூழ்ந்து கொள்ள
மனங்கள் மௌனம் கொள்ள
உங்களை இழந்ததால்
எங்கள் மனம் துடிக்குதே
காலம் பல உருண்டோடினாலும்
காலாவதியாகாத உங்கள்
நினைவுதான் எமக்கு ஒளியாகும்
விடியல்கள் அஸ்தமனமாக
விலகிவிட்ட உங்களது
ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றன இதயங்கள்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் தெற்கு, யாமாச்சந்தியைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகக் கொண்டவரும் வரதப்பாவின் அன்புத்தாயாருமாகிய

## அமரர் கந்தையா அன்னபூபதி

**மலர்வு:** 30.08.1932

**உதிர்வு:** 06.03.2017

**பிரிவால் துயருறும்,**
**சுதுமலை அம்மன் கோவிலடி**
**இளைஞர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

## திருமதி கந்தையா அன்னபூபதி



பிறப்பு : 1932.08.30
இறப்பு : 2017.03.06

எம் குடும்பத்தை காத்த வேர் இன்று இறந்து விட்டது
எம்மைக் கண்ணீர் சிந்த வைத்து விட்டது
காலமெல்லாம் எம் குடும்பம் காத்தாயே
கண்ணுக்கு இமைபோல் கடைசி வரை நம்
குடும்பம் காத்த தலைமகளே .....! எங்கே சென்றாய் .....!
இறக்கும் வரை ராசா ராசா என்று அழைத்தாய் ....! உன்
இளையமகன் வந்து பார்க்கும் முன் எங்கே சென்றாய்....!
இறப்பதற்கு முன்னும் அர்த்தனா அர்த்தனத என்று ஆவையுடன்
அழைத்த எங்கள் அன்பு அப்பம்மா எங்கே போனீர்கள்
அபிராம் ஐயா சொல்லு சொல்லு
அபிராய் ஐயா சொல்லு சொல்லு என்று ஆசையுடன் கேட்ட
அப்பம்மா எங்கே சென்றீர்கள் ....! எங்களை விட்டு விட்டு
கண்ணா நீ என்ர செல்லம் குஞ்சு என்று கண்ணை மூடிக்கொண்டு
அழைத்தீர்களே .....!
இன்று பாரை விட்டு ஏன் சென்றீர்கள்
பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பார்த்திருக்க
விண்ணுலகம் சென்றுவிட்ட எங்கள் இதய தெய்வம்
அப்பம்மாவின் ஆத்மா சாந்திஅடைய
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் மனம் கலங்கி துயருறும்
தேவன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவி

அமரர் திருமதி **கந்தையா அன்னபூபதி**

அவர்களின்

வாழ்வு இல்லறமே நல்லறம் என வழி அமைத்து வாழ்ந்து காட்டி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் சென்றபோது நேரடியாக ஒடோடி வந்து அருகில் நின்று உதவிகள்பல புரிந்தும், வைத்தியாசலை முதலாக அன்றைய ஈமக்கிரியைகள், தகனக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், இன்றைய ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்கு கொண்டிருப்போர்க்கும், தொலைபேசிகள் மூலமும் கண்ணீர்ப் பிரசுரம் மூலமும் பல வழிகளில் அனுதாபச் செய்திகளை தெரிவித்து ஆறுதல்ப் படுத்திய நல்லுள்ளத்தினர் முதலான உற்றார் உறவினர் நண்பர்கள் முதலாக இம் மலரினையும் எழுதிய சோமசுந்தரம் சிவசக்தி அவர்களுக்கும் இம் மலரினை அச்சிட்டுத்தந்த செந்தூரன் கிராபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**- குடும்பத்தினர் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ்சவிருட்சம்




அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றவருடையதாகிறது,
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்."



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

செந்தூரன் கிராபிக்ஸ் 0773820798

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org